1986 ஏப்ரல் 28]

அது வெளி மாவட்டங்களாக இருந்தாலும் வாங்கிக் கொள்ளலாம். அதற்கு எந்தத் தடையுமில்லை. இந்த நடைமுறை நல்ல முறையில் செயல்படுவதினால் இதில் எந்த மாறுதலும் தேவை யில்லை என்று அரசு கருதுகிறது.

கீழராஜகுலராமன் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள்.

589—(*வினா எண். 7866)—திரு. வி. பாலகிருஷ்ணன் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

சிவகாசித் தொகுதி, திருவில்லிப்புத்தூர் ஒன்றியத்தில் உள்ள கீழராஜகுலராமன் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு R.L.E.G.P. திட்டத்தின் கீழ் வீடுகள் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

பார்த்தீனிய செடிகளை அழித்தல்

590—(*வினா எண். 5613)—திரு. கு. சுப்பராயன் : மாண்பு மிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பார்த்தீனிய விஷச் செடியை அழிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : நம் மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் காணப்பட்ட பார்த்தீனியக் களைகள் மீது உப்பு மற்றும் சோப்புக்கரைசலை சூரிய வெளிச்சத்தில் தெளித்ததில் பார்த்தீனியம் களைச் செடிகள் கருகிவிட்டன. 3 அல்லது 4 நாட்களில் வேருடன் காய்ந்து சருகுபோல் ஆகி விடுகின்றன.

பார்த்தீனிய செடி ஒழிப்பு முறைகள் வேளாண்மைத் துறை பணியாளர்கள் மூலம் விவசாயிகளுக்குத் தெரியப்படுத்தப்படு கிறது.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்த்தீனியச் செடிகள் அழிக்கப்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் தமிழகத்தில் பெரும் பகுதிகளில் இந்தப் பார்த்தீனியச் செடிகள் மிகப் பெரிய அளவில் விளைபொருளைப் போல வளர்ந்து கொண்டிருக்கிறது. அதை நடைமுறையில் ஒழிப்பதற்கு தற் போது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை என்று நடைமுறை அனுபவம் கூறுகிறது. ஆனால்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1986 ஏப்ரல் 28

பெங்களூரில் அக்ரோ யூனிவர்சிட்டியில் இந்தப் பார்த்தீனியத்தை அழிப்பதற்குரிய ஒரு விதை கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதுபற்றி அரசு அறியுமா? அவற்றைப் பெற்று, தமிழ்நாட்டில் இத்தகைய விஷச் செடிகளை அழிக்க வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இப்போது நான் குறிப்பிட்டிருக்கிற இந்த முறை மிக மிக எளிமையானது. இது விவசாயிகள் மேற்கொள்வதற்கு மிகவும் வசதியானது. இதன் மூலமாக விவசாயிகளுக்குப் பலன் கிடைக்கிறது என்ற தகவல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதைப்போன்று பெங்களூர் பல்கலைக் கழகத்திலே அந்த விதை இருக்குமானால் அதைப்பற்றிக் கேட்டறிந்து அதைப் பயன் படுத்த அரசு முயற்சி செய்யும்.

திரு. த. பழனி: தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே பாலாற்றின் கரைகளில் இரு மருங்கிலும் பாலாற்றுத் தண்ணீர் பாய்கிற இடங்களில் எல்லாம் பார்த்தீனியச் செடிகள் இருக்கின்றன. அவை அனைத்தையும் ஒழிப்பதை விவசாயிகள் செயல்படுத்த முடியவில்லை. ஆகவே ஊராட்சி ஒன்றியங்கள் மற்ற நிர்வாகங்கள் மூலமாக அந்தப் பணியை மேற்கொள்ளச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, விவசாயத் துறை அலுவலர்கள் அதை நிறைவேற்றுவார்கள். அப்படி நிறைவேற்றவில்லை என்ற வகையிலே நிலைமை இருக்குமானால் அரசு உரிய அறிவுரைகளைச் சொல்லி நிறைவேற்றுமாறு கட்டளையிடும்.

திரு. இ. அப்பழகன்: தலைவர் அவர்களே, இந்த பார்த்தீனியச் செடிகளை அழிப்பதற்காக விவசாயிகளுக்கு துறை மூலமாக ஏதாவது நிதியுதவி வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இதற்கு நிதியுதவி தேவையில்லை.

பெரியகுளம் பேரிச்சம் ஏரியிலிருந்து குடிநீர் வழங்கல்.

591—(*வினா எண் 5637)—டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம்—தென்கரை பகுதியில் பேரிச்சம் ஏரியில் இருந்து குடிநீர் சரியாக கிடைக்கவில்லை என்பதை அரசு அறியுமா?